TNPD110023402023

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் கந்தர்வகோட்டை.**
**மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு**
**ROC.No.814/2020/RG/F1, P.Dis. No.36/2021 Dated 07.04.2021**
**சுருக்குமுறை வழக்கு எண். 254/2023**
**வழக்கின் சுருக்கம்**

| | | |
|---|---|---|
| 1. | எதிரி நீதிமன்ற காவலில் இருந்த காலம் | எதிரி 25.10.2022 அன்று கைது செய்யப்பட்டு, அன்றைய தினமே நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். |
| 2. | இறுதி அறிக்கை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாள் | 03.10.2023 |
| 3. | குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 31.10.2023 |
| 4. | தாக்கல் செய்யப்பட்ட குற்ற பல்வகை மனுக்களின் விவரம் | இல்லை |
| 5. | அரசு தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள் | **முதல் விசாரணை** / **குறுக்கு விசாரணை**<br>அ.சா.1– 27.10.2025 / 27.10.2025<br>அ.சா.2– 27.01.2026 / 27.01.2026<br>அ.சா.3– 25.02.2026 / 25.02.2026 |
| 6. | BNSS பிரிவு 351(1) ஆ இன் கீழ் எதிரியிடம் கேள்வி கேட்கப்பட்ட நாள் | 03.03.2026 |
| 7. | எதிரி தரப்பு சாட்சிகள் விசாரணை செய்யப்பட்ட நாள்: | இல்லை |



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:24:38 +0530

| | | |
|---|---|---|
| 8. | தலைமறைவு எதிரி பற்றிய விவரம் | இல்லை |
| 9. | மேல்முறையீட்டு நீதிமன்றத்தால் பிறப்பிக்கபட்ட இடைக்கால தடை உத்தரவு பற்றிய விவரங்கள் | இல்லை |

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:24:44 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கந்தர்வகோட்டை.**
**முன்னிலை: திரு.N.சிவபழனி, B.A., B.L**
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கந்தர்வகோட்டை.
**2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 07ஆம் நாள் சனிக் கிழமை**
திருவள்ளுவராண்டு 2056 விசுவாவசு வருடம் மாசி திங்கள் 23ம் நாள்
**சுருக்குமுறை வழக்கு எண். 254/2023**
**(CNR NO-TNPD 11002340-2023)**

| | | |
|---|---|---|
| 1 | வழக்கு எண் | எஸ்டிசி. எண். 254/2023 |
| 2 | காவல் நிலையத்தின் பெயர் மற்றும் குற்ற எண் | ஆதனக்கோட்டை நிலையம்,<br>குற்ற எண்.153/2022 |
| 3 | குற்றமுறையிடுபவர் | காவல் உதவி ஆய்வாளர்,<br>ஆதனக்கோட்டை காவல் நிலையம், |
| 4 | **எதிரியின் விபரம்**<br>பெயர்<br>வயது<br>தந்தையின் பெயர்<br>குடியிருப்பு | ராஜா, வயது 46/2022<br>த/பெ. அழகப்பன்,<br>புதிய மாரியம்மன் கோவில் தெரு,<br>கோவிலூர்,<br>கந்தர்வகோட்டை தாலுகா,<br>புதுக்கோட்டை மாவட்டம். |
| 5 | தேதி நாள்<br>சம்பவம் | 23.10.2022 |
| 6 | முறையீடு | 24.10.2022 |
| 7 | கைது | 25.10.2022 |
| 8 | பிணையில் விடுவித்தல் | 25.10.2022 |
| 9 | விசாரணை துவக்கம் | 27.10.2025 |
| 10 | விசாரணை முடிவு | 25.02.2026 |
| 11 | தண்டனை அல்லது உத்தரவு | முடிவாக, எதிரி சட்டப்பிரிவுகள் 279, 338 இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து , எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)-ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது. |
| 12 | தீர்ப்புரை நகலை வழங்குவது அல்லது குற்றம் சாட்டப்பட்டவர் மீதான காண் முடிவு | -- |
| 13 | காலதாமதத்திற்கான விளக்கம் | அரசுத்தரப்பு சாட்சிகளை விசாரிக்க காலதாமதம் |



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:24:51 +0530

இவ்வழக்கானது 05.10.2023 அன்று இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு 07.03.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, அரசுக்காக **அரசு உதவி குற்றத்துறை வழக்கறிஞர்** அவர்கள் ஆஜராகியும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் **திரு.M.ஜெயந்தன், B.Sc., B.L.,** அவர்களும் ஆஜராகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.

## தீர்ப்புரை

**2. அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

கடந்த 23.10.2022ம் தேதி பிற்பகல் சுமார் 07.10 மணியளவில் பட்டியல் சாட்சி–1 லெட்சுமிநாராயணன் என்பவர் அவரது சொந்த ஊரான வல்லத்திற்கு சென்று அவரது அம்மாவை பார்த்து விட்டு திரும்ப TN 55 AL 6930 என்ற பதிவெண் கொண்ட Hero Splender+ இருசக்கர வாகனத்தில் புதுக்கோட்டை வருவதற்காக தஞ்சாவூர் – புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் சோழகம்பட்டி சரணி பள்ளி அருகே வந்து கொண்டிருந்தபோது, சாலையில் விழுந்து கிடந்த ஒரு வயதான நபரை பார்த்து பட்டியல் சாட்சி–1 அவரது இருசக்கர வாகனத்தை ரோட்டின் இடது ஓரமாக மண் தரையில் நிறுத்திவிட்டு அவரை தூக்கிக் கொண்டிருந்தபோது, பட்டியல் சாட்சி–1க்கு பின்னால் எதிரி TN 55 S 4515 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து அவர் மீது மோதி அவருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தி குற்றம் புரிந்துள்ளார். எனவே எதிரி மீது பிரிவு 279, 338 இதசவின் கீழ் ஆதனக்கோட்டை காவல் உதவி ஆய்வாளர் குற்றயிறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிக்கு அழைப்பாணை அனுப்பி எதிரி நீதிமன்றத்தில் முன்னிலையான போது எதிரிக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் படி வழக்கு



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:24:58 +0530

ஆவணங்களின் நகல்கள் அனைத்தும் இலவசமாக வழங்கப்பட்டது, எதிரிக்கு போதிய வாய்ப்பும், சந்தர்ப்பமும் அளிக்கப்பட்டது.

**4. குற்றச்சாட்டு :–**

அரசுத்தரப்பில் முன் வைக்கப்பட்டுள்ள முகாந்திரங்கள் எதிரி குற்றம் புரிந்திருப்பார் என கருதவும், கருத்தில் கொண்டு செயலாற்றவும் வழிவகுப்பனவாக தெரிந்தமையால், எதிரிக்கு எதிராக பிரிவுகள் 279, 338 இதசவின் கீழ் குற்றத்தின் சாராம்சங்கள் குறித்து எதிரிக்கு படித்துக்காட்டி, விளக்கிக் கூறி வினவியபோது எதிரி குற்றத்தை மறுத்து தான் குற்றவாளி இல்லை என கூறினார். எனவே இவ்வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

5. இவ்வழக்கில் அரசுத்தரப்பில் 1 முதல் 7 வரையிலான சாட்சிகள் பட்டியலிடப்பட்டு, அ.சா.1 முதல் அ.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. சான்று பொருள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை.

**அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து தெரியவரும் அரசுத்தரப்பு வழக்கின் சுருக்கம்:–**

6. வழக்கு சம்பவத்தில் காயமுற்று புதுக்கோட்டை முத்துராஜா தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1 லெட்சுமிநாராயணன் என்பவர் வழக்கு சம்பவம் குறித்து கடந்த24.10.2022ம் தேதியன்று ஆதனக்கோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அ.சா.3 அருணகிரி என்பவரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் வாக்குமூலத்தைப் பெற்ற காவல் உதவி ஆய்வாளர் நிலைய குற்ற எண்.153/2022ல், சட்டப்பிரிவுகள் 279, 337 இதசவின் கீழ் வழக்கு பதிவு செய்து அ.சா.ஆ.2கணினி முதல் தகவல் அறிக்கை தயார் செய்துள்ளார்.



SIVAPALANI
Digitally signed by SIVAPALANI
Date: 2026.03.07 17:25:05 +0530

7. காவல் உதவி ஆய்வாளர் வழக்கின் கோப்பினை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 24.10.2022ம் தேதி பிற்பகல் 02.00 மணியளவில் சம்பவ இடம் சென்று பட்டியல் சாட்சி–3 சத்தியமூர்த்தி மற்றும் பட்டியல் சாட்சி–4 மோகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு அ.சா.ஆ.3 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.4 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். வழக்கு சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சியாக அ.சா.2 வீரச்செல்வம் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.2 காமராஜ் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். சாட்சிகளை விசாரணை செய்ததில் வழக்கின் சம்பவம் உண்மையென தெரியவந்து எதிரியை தேடிவந்த நிலையில், 25.10.2022ம் தேதி மதியம் 12.30 மணிக்கு, தாமாக நிலையம் ஆஜரான எதிரி ராஜா என்பவரை காரணம் கூறி கைது செய்து, உரிய நடைமுறைக்கு பின் நிலைய பிணையில் விடுவித்துள்ளார்.

8. புதுக்கோட்டை வட்டார போக்குவரத்து அலுவலகத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் பட்டியல் சாட்சி–5 ஜெய்சங்கர் என்பவர் வழக்கு விபத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்து அ.சா.ஆ.5 ஆக மோட்டார் வாகன ஆய்வறிக்கை வழங்கியுள்ளார். பட்டியல் சாட்சி–6 மருத்துவர் ராம்குமார் பாரதி வழக்கு விபத்து சம்பவத்தில் காயமுற்ற அ.சா.1 லெட்சுமிநாராயணன் என்பவருக்கு சிகிச்சையளித்து அ.சா.ஆ.6 விபத்து பதிவேடு மற்றும் அ.சா.ஆ.7 காயச்சான்று வழங்கியுள்ளார். மேற்படி அ.சா.ஆ.5, அ.சா.ஆ.6 மற்றும் அ.சா.ஆ.7 ஆவணங்களுக்கு எதிரி தரப்பில் ஆட்சேபனை தெரிவிக்கப்படவில்லை என்பதால், குவிமுச பிரிவு 294(3)இன் கீழ் மேற்படி ஆவணங்கள் புலன் விசாரணை அதிகாரியின் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

9. காயச்சான்றில் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என்று கருத்துரை வழங்கப்பட்டிருந்ததால், வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதசவிலிருந்து 279, 338 இதசவாக பிரிவு மாற்றம் செய்து அ.சா.ஆ.8 சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார். பின்னர் காவல் உதவி ஆய்வாளர் வழக்கின் விசாரணையை முடித்து, வழக்கு கோப்பினை பார்வையிட்டு எதிரிக்கு எதிராக



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:25:11 +0530

சட்டப்பிரிவுகள் 279, 338 இதசவின் கீழ் குற்ற இறுதியறிக்கை தயார் செய்து தாக்கல் செய்துள்ளார்.

10. இத்துடன் அரசுத் தரப்பு சாட்சியம் முடிக்கப்பட்டது.

11. அரசுத் தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து எதிரிக்கு பாதகமாக தோன்றும் அம்சங்கள் குறித்து BNSS பிரிவு 351(1)(ஆ) –ன் படி வினவியபோது எதிரி அதனை மறுத்து பொய்சாட்சியம் என்றார். எதிரி தரப்பில் சாட்சியாக யாரும் விசாரிக்கப்படவில்லை.

**12. விவாதம்:–**

கற்றறிந்த அரசுத்தரப்பு வழக்கறிஞர் இவ்வழக்கில், அரசுத்தரப்பு சாட்சிகள் மூலம் குற்றச்சாட்டு மெய்பிக்கப்பட்டுள்ளதால் எதிரிக்கு தகுந்த தண்டனை அளிக்க வேண்டுமென்று வாதிட்டார்.

எதிரி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர், இதனை மறுத்து இவ்வழக்கில் அரசுத் தரப்பில் எதிரி மீதான குற்றம் சந்தேகத்திற்கிடமின்றி மெய்பிக்கப்படாததால் சந்தேகத்தின் பலனை எதிரிக்கு அளித்து எதிரியை விடுதலை செய்யுமாறு வாதிட்டார்.

**13. தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை:–**

இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டியது என்னவெனில் எதிரி மீது அரசுத்தரப்பில் சுமத்தப்பட்ட குற்றமானது விசாரிக்கப்பட்ட சாட்சியம் மற்றும் சான்றாவணங்களின் மூலம் எந்தவிதமான சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா என்பதே ஆகும்.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:25:17 +0530

## தீர்வு

14. இருதரப்பும் கேட்கப்பட்டது அரசுத்தரப்பு சாட்சிகளின் சாட்சியங்கள், சான்றாவணங்கள் மற்றும் வழக்காவணங்கள் நன்கு பரிசீலனை செய்யப்பட்டது.

15. அரசு தரப்பில், கடந்த 23.10.2022ம் தேதி பிற்பகல் சுமார் 07.10 மணியளவில் அ.சா.1 TN 55 AL 6930 என்ற பதிவெண் கொண்ட Hero Splender+ இருசக்கர வாகனத்தில் தஞ்சாவூர் – புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் சோழகம்பட்டி சரணி பள்ளி அருகே வந்து கொண்டிருந்தபோது, சாலையில் கிடந்த ஒரு வயதான நபரை பார்த்து இருசக்கர வாகனத்தை ரோட்டின் இடது ஓரமாக மண் தரையில் நிறுத்திவிட்டு அவரை தூக்கிக் கொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் எதிரி TN 55 S 4515 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தி அவருக்கு கொடுங்காயத்தை ஏற்படுத்தியதாக எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

16. வழக்கு சம்பவத்தில் காயமுற்று புதுக்கோட்டை முத்துராஜா தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த அ.சா.1 லெட்சுமிநாராயணன் என்பவர் வழக்கு சம்பவம் குறித்து கடந்த24.10.2022ம் தேதியன்று ஆதனக்கோட்டை காவல் நிலைய உதவி ஆய்வாளர் அ.சா.3 அருணகிரி என்பவரிடம் புகார் வாக்குமூலம் கொடுத்துள்ளார். மேற்படி புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி புகார் வாக்குமூலத்தை பரிசீலனை செய்ததில், அ.சா.1 தனது ஊரான வல்லத்திற்கு சென்று அவரது அம்மாவை பார்த்து விட்டு திரும்ப TN 55 AL 6930 என்ற பதிவெண் கொண்ட Hero Splender இருசக்கர வாகனத்தில் சென்று பார்த்துவிட்டு மீண்டும் புதுக்கோட்டை வருவதற்காக தஞ்சாவூர் – புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் 23.10.2022ம் அன்று மாலை சுமார் 07.10 மணியளவில் சோழகம்பட்டி சரணி பள்ளி அருகே வந்து கொண்டிருந்தபோது, சாலையில் விழுந்து கிடந்த ஒரு வயதான நபரை பார்த்துவிட்டு இருசக்கர வாகனத்தை சாலையின் இடது ஓரமாக மண் தரையில் நிறுத்திவிட்டு அவரை தூக்கும்போது, அவருக்கு பின்னால்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:25:30 +0530

வந்த எதிரி ராஜா TN 55 S 4515 என்ற பதிவெண் கொண்ட TVS XL இருசக்கர வாகனத்தை அவர் மீது மோதியதில் அ.சா.1க்கு வலது முழுங்காலின் கீழே இரத்தக்காயமும், இடது கை மணிக்கட்டில் இரத்தக் காயமும், வலது கை முட்டியின் கீழ் சிராய்ப்பு காயமும், வாயின் முன் பல்லில் லேசான அடியும் ஏற்பட்டதாகவும், உடனே அருகில் இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தார்கள் என்றும், பின்னர் மேல் சிகிச்சைக்காக அங்கிருந்து புதுக்கோட்டை முத்துராஜா தனியார் மருத்துவமனையில் உள்நோயளியாக சேர்ந்து சிகிச்சை பெற்று வந்ததாகவும், அப்போது ஆதனக்கோட்டை போலீசார் தன்னை விசாரித்து புகார் வாக்குமூலம் பெற்றுக் கொண்டதாகவும் குறிப்பிட்டு புகார் வாக்குமூலம் அளிக்கப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

17. வழக்கு சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் கொடுத்துள்ள லெட்சுமிநாராயணன் என்பவர் அ.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 23.10.2022 ஆம் தேதி தீபாவளிக்கு முதல் நாள் வல்லத்திற்கு தனது அம்மாவை பார்க்க சென்றதாகவும், தனது அம்மாவை பார்த்துவிட்டு திரும்பி புதுக்கோட்டை செல்வதற்காக, தஞ்சாவூர் – புதுக்கோட்டை மெயின் ரோட்டில் தனது ஹீரோ ஹோண்டா ஸ்பிளண்டர் இருசக்கர வாகனத்தில், ஆதனக்கோட்டைக்கு முன்பாக சென்று கொண்டிருந்த போது, ஒரு வயதான நபர் சாலையில் விழுந்து கிடந்ததாகவும், அவரை தூக்கிக் கொண்டிருந்த போது, தனக்கு பின்னால் வந்த இருசக்கர வாகனம் தன் மீது மோதியதால், தான் குப்புற கீழே விழுந்து விட்டதாகவும், அதனால், தனக்கு இடது கையிலும், வலது காலிலும் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும், அதற்காக அறுவை சிகிச்சை செய்யப்பட்டு தற்போது ஸ்டீல் வைக்கப்பட்டுள்ளதாகவும், பின்னர், 108 ஆம்புலன்ஸ் மூலமாக புதுக்கோட்டை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், அங்கு சிகிச்சை அளிக்க தாமதமானதால் புதுக்கோட்டையில் உள்ள முத்துராஜா தனியார் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றதாகவும், அங்கு 10 நாள்கள் சிகிச்சையில் இருந்ததாகவும், தான் சிகிச்சையில் இருந்த போது, போலிசார் தன்னை விசாரித்து புகார் வாக்குமூலம் வாங்கிக் கொண்டதாகவும், சம்பவத்தின்போது



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:25:38 +0530

சம்பவ இடத்தில் விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை பார்க்கவில்லை என்றும், மறுநாள் ராஜா என்ற நபர் மேற்படி இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்ததாக போலிசார் சொன்னார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

18. வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக அ.சா.5 காமராஜ் என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த சுமார் 2 வருடங்களுக்கு முன்பு 23 ஆம் தேதி, இரவு 07.00 மணியளவில் தனது இருசக்கர வாகனத்தில், வேலைக்கு செல்வதற்காக ஆதனக்கோட்டை செல்வதற்கு தஞ்சாவூர் – புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்ததாகவும், ஆதனக்கோட்டை சரணி பள்ளி அருகே, இருசக்கர வாகனத்தில் வந்த லெட்சுமி நாராயணன் என்பவர் காலில் அடிபட்டு, கீழே விழுந்து கிடந்தார் என்றும், மற்றொரு இருசக்கர வாகனம், அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக தெரிந்து கொண்டேன் என்றும், அதன்பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலமாக காயம்பட்டு கிடந்த அவரை, சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தேன் என்றும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும், போலிசார் தன்னை விசாரித்தார்கள் என்றும் சாட்சியம் அளித்துள்ளார்.

19. காவல் உதவி ஆய்வாளர் அ.சா.3 அருணகிரி வழக்கின் புலன் விசாரணை குறித்து சாட்சியம் அளித்துள்ளார். அவர் தனது சாட்சியத்தில், கடந்த 24.10.2022 ஆம் தேதியன்று ஆதனக்கோட்டை காவல் நிலைய, உதவி ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது, புதுக்கோட்டை முத்துராஜா தனியார் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த, லெட்சுமிநாராயணன் என்பவரிடம் புகார் வாக்குமூலம் பெற்று வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது குறித்தும், 24.10.2022 ஆம் தேதி பிற்பகல் 02.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சாட்சிகள் சத்தியமூர்த்தி மற்றும் மோகன் ஆகியோர் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளது குறித்தும், பட்டியல் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளது குறித்தும், எதிரியை கைது செய்து நிலைய



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:25:44 +0530

பிணையில் விடுவித்தது குறித்தும், பின்னர் புதுக்கோட்டை வட்டார போக்குவரத்து அலுவலகம் சென்று, வழக்கு விபத்து சம்பத்தை ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர் ஜெயசங்கர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்று, மோட்டார் வாகன ஆய்வறிக்கை பெற்றது குறித்தும், புதுக்கோட்டை முத்துராஜா மருத்துவமனை சென்று, அ.சா.1–க்கு சிகிச்சை அளித்த மருத்துவர் ராம்குமார் பாரதி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பெற்றது குறித்தும், காயச்சான்றில் அ.சா.1க்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என கருத்துரை வழங்கப்பட்டிருந்ததால், வழக்கின் சட்டப்பிரிவுகளை 279, 337 இதச விலிருந்து பிரிவுகள் 279, 338 இதச ஆக பிரிவு மாற்றம் செய்து சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்தது குறித்தும், வழக்கு விசாரணை முடித்து குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளது குறித்தும் சாட்சியம் அளித்துள்ளார்.

20. அரசு தரப்பில், கடந்த 23.10.2022ம் தேதி பிற்பகல் சுமார் 07.10 மணியளவில் அ.சா.1 தனது சொந்த ஊரான வல்லத்திற்கு சென்று அவரது அம்மாவை பார்த்துவிட்டு திரும்ப TN 55 AL 6930 என்ற பதிவெண் கொண்ட Hero Splender+ இருசக்கர வாகனத்தில் புதுக்கோட்டை வருவதற்காக தஞ்சாவூர் – புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் சோழகம்பட்டி சரணி பள்ளி அருகே வந்து கொண்டிருந்தபோது, சாலையில் விழுந்து கிடந்த ஒரு வயதான நபரை பார்த்து அ.சா.1 தனது இருசக்கர வாகனத்தை ரோட்டின் இடது ஓரமாக மண் தரையில் நிறுத்திவிட்டு அவரை தூக்கிக் கொண்டிருந்தபோது, அவருக்கு பின்னால் எதிரி TN 55 S 4515 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தை அதிவேகமாவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து அவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி அவருக்கு கொடுங்காயம் ஏற்படுத்தியதாக எதிரி மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

21. வழக்கு விபத்து சம்பவத்தில் காயமுற்று புதுக்கோட்டை முத்துராஜா தனியார் மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்து அ.சா.1 லெட்சுமி நாராயணன் வழக்கு சம்பவம் குறித்து புகார் வாக்குமூலம் அளித்துள்ளார். ஆனால் அ.சா.1 தனது நீதிமன்ற சாட்சியத்தில், சம்பவத்தின் போது இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்த நபரை தான்



SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:25:52 +0530

பார்க்கவில்லை என்றும், மறுநாள் போலிசார் ராஜா என்ற நபர் இருசக்கர வாகனத்தை ஓட்டி வந்ததாக சொன்னதாகவும் சாட்சியமளித்துள்ளார். வழக்கு விபத்து சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 காமராஜ் வழக்கு சம்பவத்தை நேரில் பார்த்ததாக சாட்சியம் அளிக்கவில்லை. மாறாக தனது சாட்சியத்தில், தான் தனது இருசக்கர வாகனத்தில், வேலைக்கு செல்வதற்காக ஆதனக்கோட்டை செல்வதற்கு தஞ்சாவூர் – புதுக்கோட்டை தேசிய நெடுஞ்சாலையில் சென்று கொண்டிருந்ததாகவும், ஆதனக்கோட்டை சரணி பள்ளி அருகே, இருசக்கர வாகனத்தில் வந்த லெட்சுமி நாராயணன் என்பவர் காலில் அடிபட்டு, கீழே விழுந்து கிடந்தார் என்றும், மற்றொரு இருசக்கர வாகனம், அவர் மீது மோதி விபத்து ஏற்படுத்தியதாக தெரிந்து கொண்டதாகவும், அதன்பிறகு 108 ஆம்புலன்ஸ் மூலமாக காயம்பட்டு கிடந்த அவரை, சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்ததாகவும், ஆஜர் எதிரியை தனக்கு தெரியாது என்றும், வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் தனக்கு தெரியாது என்றும், அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார். எனவே, மேற்படி அ.சா.2 இன் சாட்சியத்திலிருந்து அ.சா.2 வழக்கு சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்பது தெரிய வருகிறது.

22. வழக்கு சம்பவத்தில் காயமுற்ற அ.சா.1 இன் சாட்சியம் எதிரியை வழக்கு சம்பவத்துடன் தொடர்புப்படுத்துவதாக அமையவில்லை என்பதாலும், வழக்கு சம்பவத்தை கண்ணுற்ற சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ள அ.சா.2 அரசுத்தரப்பு வழக்கினை அனுசரித்து சாட்சியம் அளிக்கவில்லை என்பதாலும், எதிரி தான் வழக்கு விபத்து சமயத்தில் விபத்து ஏற்படுத்தியதாக சொல்லப்படும் இருசக்கர வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து விபத்தை ஏற்படுத்தினார் என்பதை நிரூபிக்க அரசுத் தரப்பில் போதிய சாட்சியங்கள் முன்னிறுத்தப்படவில்லை என்பதால், அரசுத்தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் மூலம் எதிரிக்கு எதிராக சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு அரசுத் தரப்பில் சந்தேகத்திற்கிடமின்றி நிரூபிக்கப்படவில்லை என்று இந்நீதிமன்றம் முடிவு காண்கிறது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:25:58 +0530

**23. முடிவாக, எதிரி சட்டப்பிரிவுகள் 279, 338 இதசவின் கீழ் குற்றவாளி இல்லை என்று முடிவு செய்து , எதிரியை கு.வி.மு.ச பிரிவு 255(1)–ன் கீழ் விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கிறது.**

24. வழக்கு சொத்துக்கள் ஏதும் இல்லை. எதிரி எழுதிக்கொடுத்துள்ள பிணை பத்திரங்கள் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை திருத்தம் செய்யப்பட்டு, இன்று 07.03.2026ம் தேதியில் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:26:03 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**

**அரசுத்தரப்பு சாட்சிகள்:–**

| **அரசு தரப்பு சாட்சிகளின் வரிசை** | **சாட்சிகளின் பெயர்** | **சாட்சிகளின் விபரம்** |
|---|---|---|
| அ.சா.1 | திரு. லெட்சுமி நாராயணன் | புகார்தாரர் |
| அ.சா.2 | திரு. காமராஜ் | கண்ணுற்ற சாட்சி |
| அ.சா.3 | திரு. அருணகிரி | புலன் விசாரணை அதிகாரி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்:–**

| **சான்று ஆவணங்களின் வரிசை** | **தேதி** | **சான்றாவணங்களின் விபரம்** | **யாரால் நிரூபிக்கப்பட்டுள்ளது** |
|---|---|---|---|
| அ.சா.ஆ.1 | 27.10.2025 | புகார் வாக்குமூலம் | அ.சா.1 |
| அ.சா.ஆ.2 | 25.02.2026 | முதல் தகவல் அறிக்கை | அ.சா.3 |

| | | | |
|---|---|---|---|
| அ.சா.ஆ.3 | 25.02.2026 | பார்வை மகஜர் | அ.சா.3 |
| அ.சா.ஆ.4 | 25.02.2026 | மாதிரி வரைபடம் | அ.சா.3 |
| அ.சா.ஆ.5 | 25.02.2026 | மோட்டார் வாகன ஆய்வறிக்கை | அ.சா.3 |
| அ.சா.ஆ.6 | 25.02.2026 | விபத்து பதிவேடு | அ.சா.3 |
| அ.சா.ஆ.7 | 25.02.2026 | காயச்சான்று | அ.சா.3 |
| அ.சா.ஆ.8 | 25.02.2026 | சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.3 |

**அரசுத்தரப்பு சான்று பொருட்கள்:** இல்லை

**எதிரியின் தரப்பில் சாட்சிகள், சான்றாவணங்கள் மற்றும் சான்று பொருட்கள்:** இல்லை.

**குறிப்பு**

1. எதிரி 25.10.2022 அன்று கைது செய்யப்பட்டு, அன்றைய தினமே நிலைய பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2. சாட்சிகள் மூன்று தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

3.இவ்வழக்கின் தீர்ப்பு சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இவ்வழக்கில் வழக்கு சொத்துக்கள் இல்லை.

SIVAPALANI Digitally signed by SIVAPALANI Date: 2026.03.07 17:26:09 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கந்தர்வகோட்டை.**